DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.233/19

Deposition of Witness: PW 2

| | |
|---|---|
| Name மாரியம்மாள் | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.11.2022

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் தற்போது கோயமுத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் வீட்டு குடித்தனமாக இருந்து வருகிறேன். 7.5.19 அன்று நான் என் அம்மா, அண்ணன், கணவர், கொழுந்தன் எல்லோரும் ஆட்டோவில் வீரபாண்டி கோவிலுக்கு சென்றோம். ஹசன் என்பவர் வண்டியில் சென்றோம். கோவிக்கு சென்றுவிட்டுவரும் போது இரவு நேரத்தில் ஆட்டோவை மிக வேகமாக ஓட்டினார். ஏன் இவ்வளவு வேகமாக போகிறீர்கள் மெதுவாக போங்கள் என்று சொன்னோம். அவர் திடீரென பிரேக் போட்டார் அப்போது பின்புறம் உட்கார்ந்திருந்த எனது அண்ணன் புழுகுசாமி கிழே விழுந்துவிட்டார். அவருக்கு தலை மூக்கில் அடிப்பட்டுவிட்டது. அவரை போடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கிருந்து அவரை க.விலக்கு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு அவர் உடல்நிலை மோசமாகிவிட்டதால் அங்கிருந்து மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அதற்கு பின்பு அவர் இறந்துவிட்டார். இது சம்மந்தமாக புகார் கொடுத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

சம்பவ சமயத்தில் ஹசன் என்பவர் எந்தவாகனத்தையும் ஓட்டவில்லை என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த நபர் என் அண்ணன் என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் என் அண்ணன் தூங்கிகொண்டு வந்தார் என்றும் விபத்திற்கு அவரின் கவனக்குறைவு தான் காரணம் என்றால் சரியல்ல. என் அண்ணன் குடும்பத்திற்கு விபத்துஇழப்பீடு பெற்றுதரவேண்டும் என்பதற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.